முருகப்பெருமான் துணை

**மகான் சூரியானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

17.11.2022, வியாழக்கிழமை

1. குருவாக வந்தருளும் அரங்கா
குவலயம் காத்தருள வேண்டி
தருமம் வளர்க்கும் தேசிகா
தவராஜனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள் திங்கள்
குறைவிலா ஏகதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 01 ம் நாள் 17.11.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் சூரியானந்தர் யானும்
தேசிகனுக்கு அனுகூல ஆசி உரைப்பேன்
3. உரைக்கவே சுத்த சைவ நெறியே
உண்மை ஞான வழியாகும்
கரையேறும் வள்ளல் நெறியாகும்
கண்டுணர்ந்து கலியுக மக்கள்
4. மக்கள் எல்லாம் அரங்கன்வழி
மரணம் வெல்லும் வழியென
தேக்கமின்றித் தேடி வருக
தெரிவிப்பேன் தேற்றம் உறுதி
5. உறுதி கண்டு மண்ணுலகில் இனி
உயிர் கொலை பாதகம் புரியா
தருமவான்களாக மாறி இனிதே
தவராஜனின் அனுகூலம் கண்டிட
6. கண்டிட தீட்சை தருமபலமென
கணக்கிலா சக்திபல கூடியே
தொண்டுவழி தேக்கமின்றியே
தொடர்ந்து வந்து சிறந்து
7. சிறந்து தயவுமிகுந்த மக்களாக
சித்தபெருமக்கள் அருளுகின்ற
அறத்தில் சிறந்தவர்களாகவும்
ஆணவம் தலைகணம் அகற்றிய
8. அகற்றிய சான்றோர்களாகவே
அழியாமை பெற உண்டான
மகத்துவம் கண்டு சிறந்து
மண்ணுலகை மாற்றம் செய்யும்
9. செய்யும் ஞானிகள் ஆகவே
செப்பிடுவேன் ஏற்றம் கண்டு
அய்யன் முருகப் பெருமானின்
அருள் காட்சி ஆசிபெற்ற நல்

10. நல்மக்களாக உயர்ந்துமே
ஞானி அரங்கமகான் வழி
வல்லமை கூடி வளர்ந்துநன்கு
வையகத்தில் ஞான ஆட்சி

11. ஆட்சிதனை இனிதே படைப்பர்
அகிலம் எங்கிலும் தருமமிக்க
மாட்சிமை நிறைந்த வளர்ந்த
மகான்கள் ஆட்சியை நிறுவுவர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–